(iii) மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் கலைசார் உருவாக்கம், விளையாட்டுத் திறமைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துதல் ;

(iv) மாணவர்களின் பொதுவான கல்வி அறிவை மேம் படுத்தும் நோக்கில் அவர்களுக்கென வகுப்புகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், மாநாடுகள், செயலமர்வுகள், கலந்தரையாடல்கள், கருத்துப் பரிமாறல்கள், கல்விசார் சுற்றுலாக்கள் மற்றும் கண்காட்சிகளை நடாத்துதல் ;

(v) வாழ்க்கை தொழில்சார் கல்வி, விளையாட்டுச் செயற்பாடுகள், தலைமைத்துவம், கணனி, ஊடகம் மற்றும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் உட்பட மொழிகளில் பயிற்சிக்கென சந்தர்ப்பத்தை அளிப்பதன்மூலம் இளைஞர் களின் திறமைகளை மேம்படுத்துதல் ;

(vi) உதவி தேவையிலுள்ள பாடசாலைகளுக்கு கட்டி டங்களை ஏற்பாடு செய்வதுடன் அத்தகைய பாட சாலைகளின் வேறு தேவைகளுக்கு உதவுதல் ;

(vii) வறிய, கைவிடப்பட்ட மற்றும் சுகவீனமுற்ற ஆட்களுக்கு நிவாரணத்தையும் உணவையும் ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(viii) பார்வையற்ற, காது கேளாத, வாய் பேசாத, ஊனமுற்ற, வயதுபோன மற்றும் இடம்பெயர்ந்த ஆட்களுக்கென நிலையங்களையும் வசதிகளையும் தாபித்துப் பேணுதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை அமுலாக்குவதில், கூட்டுத்தாபனமானது அத்தகைய அமுலாக் கம், இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் அல்லது அத்தகைய ஏதுக்களில் ஏதேனுமொன்றின் அடிப்படையின் மீதான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப் படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

